# இராணுவகட்டுப்பாடு இல்லாத பகுதிகளுக்குசெல்ல
# ஆஸி·தூதுவருக்கு படையினர் அனுமதி மறுப்பு

(வவுனியா)
அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்த அவுஸ்திரேலியாவின் உதவி ஸ்தானிகரை, இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களுக்கு மாத்திரமே செல்வதற்கு அனுமதியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 5 இதழ் 253
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21 — 10 — 1992

## கிளாலி கடற்பரப்பில் பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
நேற்று அதிகாலைவேளை கிளாலிகடற்பரப்பில் கடற்படைப் பீரங்கிப்படகுகள் கடுமையான பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டன. கொழும்பு செல்வதற்காக கிளாலியிருந்து பல படகுகளில் சென்ற பயணிகள் தெய்

(4ம் பக்கம் பார்க்க)

## மாணவர் சென்ற படகு தாக்கப்பட்டது

(திருநெல்வேலி)
பல்கலைக்கழகப் பரீட்சைகளை முடித்துக்கொண்டு கிளாலி ஊடாக மட்டக்களப்பிற்குச் சென்ற பல்கலைக்கழக மாணவர்களின் படகுகள் மீதும் கிளாலிக்கடலில் படை—

(4ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாண எல்லைப்புறத்திலுள்ள சிங்கள - முஸ்லிம் கிராமவாசிகளுக்கு அரசு 303 ரக ரைபிள் வழங்க முடிவு!

## ஆயுதப்பயிற்சியும் கூடவே வழங்கப்படும்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தின் எல்லைப்புற கிராமங்களைச் சேர்ந்த சிங்கள முஸ்லிம்மக்களுக்கு 303 ரக ரைபிள்களை வழங்குவதற்கு அரசு முடிவசெய்துள்ளது. இவர்களுக்கு ஏற்கனவே ஷொட்கன்களும் வழங்கப்பட்டிருந்தன. நவீன ரைபிள்களுடன் இவர்களுக்கு தீவிர ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கும் அரசு முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் எல்லைப்புறக் கிராமங்களிலுள்ள சிங்களவர்களுக்கும் — முஸ்லிம்களுக்கும் ஆயுதப்பயிற்சிவழங்கப்பட்டு ஆயுதங்களும் வழங்கப்படவுள்ளன.

தற்போது கிழக்கில் எல்லைக் கிராமங்கள் பலவற்றில் படையினர் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தி பாதுகாப்பை பெருமளவில் பலப்படுத்தியுள்

4ம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 தமிழர் வவுனியா நீதிமன்றில் விடுதலை

(கொழும்பு)
மகஸின் சிறைச்சாலையில் கடந்த மூன்று மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 தமிழர்கள் கடந்த வாரம் வவுனியா நீதிமன்றத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

வடபகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு சென்றதாக தடை முகாம்களில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களே இந்த 31 பேருமாவர். இவர்களில் பெண்களும் அடங்குவர். (வி)

## கொலைசம்பவங்களைகண்டித்து மாணவர் ஆர்ப்பாட்டம்

### 'பிரேமா'வின் படமும் கொளுத்தப்பட்டது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பகுதியில் இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களைக் கண்டித்து நேற்று நண்பகல் கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினர்கள். இதில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாஸாவின் உருவப் படம் தீயிட்டுக் கொளுத்தப் பட்டது.

பல்கலைக் கழக வளவினுள் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 10 000 மாணவர்கள் கலந்துகொண்டதாகவும் பல சுலோக அட்டைகளை மாணவர்கள் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையை 'கறுப்புதினமாக' அனுஷ்டிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அழைப்பின் பேரில் வகுப்புகளை பகிஷ்கரிப்பது குறித்தும் மாணவர்கள் ஆராய்ந்து வருகிறார்களாம். (சி)

## கிளாலி — கெற்பேலிக்கு புதிய பாதை அமைப்பு

(யாழ்ப்பாணம்)
கிளாலியிலிருந்து கெற்பேலிக்கு புதியபாதையொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்காக, வடக்கு கிழக்கு மாகாண சபை 5 லட்சம் ரூபாவை யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கு அனுப்பியுள்ளது.

கெற்பேலியில் பெருமளவு அகதிகள் குடியேற்றப்படுவதினால், அவர்களின் போக்குவரத்து வசதிகளை முன்னிட்டே இப்புதிய பாதை அமைக்கப்படவுள்ளது.

யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் இப்புதிய பாதை அமைக்கும் பணியை, பெருந்தெருக்கள் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

## பொலநறுவைசம்பவத்துக்கு புலிகள் முற்றாக மறுப்பு

(பொலநறுவை)
பொலநறுவை எல்லைக் கிராமங்களில் கடந்த வாரம் இடம்பெற்ற 146 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை விடுதலைப்புலிகள் செய்ததாகக் கூறப்படுவதை விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளனர்.

இதேவேளையில் மேற்படி கொலைச்சம்பவம் இலங்கை அரசால் மிகவும் கவனத்துடன் செயல்படுத்தப்பட்ட ஒன்று என விடுதலைப் புலிகள் லண்டன் அலுவலகத்திலிருந்து கொழும்பில் உள்ள ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு வந்த அறிக்கை கூறுவதாக வெரித்தாஸ் வானொலி நேற்று தெரிவித்தது. (க)

## உணவு லொறிகளில் பற்றறி அகற்றப்படுவதுபற்றி ஹமில்டனுக்கு புகார்

(கொழும்பு)
கொழும்பிலிருந்துவடபகுதிக்கு உணவுப்பொருட்களை ஏற்றிவரும் லொறிகளின் பற்றறிகளை வவுனியாவில் வைத்து இராணுவத்தினர் அகற்றிவிடுவதினாலேயே, யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுவருகின்றது என்று கூட்டுப்படைத் தலைமையகம் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இச்செயலினால் 500க்கும் அதிகமான லொறிகள் வவுனியாவிலும், மற்றைய இடங்களிலும் முடங்கிக்கிடக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜெர்மனியில் அகதிகள் மீது கடும் கட்டுப்பாடு விதிப்பு!

(பொன்)
ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ள வெளிநாட்டு அகதிகள் மீது அந்நாட்டு அரசு கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதற்கமைய அகதிகளுக்கான உதவிப்பணம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு அகதிகள் ஜேர்மனியில் அரசியல் தஞ்சத்தை பெறுவதற்கான நடைமுறைகளையும் சூழ்நிலைகளையும் கடுமையானதாக்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

வீதியெங்கும் மரம் நடுவோம்
விழி போலக் காத்திடுவோம்.

## வரி விளம்பரம்

### தேவை

கோழிப் பண்ணை வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை நேரில் வரவும். திரு. ந பத்மசோதி. கூட்டுறவுப் பரிசோதகர், நெல்லியடி. திக்கம் றோட், ஆலங்கட்டையடி, வதிரி. [சி-6901]

### மணமகளா / மணமகனா

எம்மிடம் வெளிநாட்டு பெண்களும் உள்நாட்டு மணமக்களும் சைவபோசன விருப்பிகளும் இருக்கிறார்கள். சந்திப்பு ஞாயிறு காலை மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (சி-6906)

### இனிய நினைவுக்கு ஒரு மரம்

இனிய நிகழ்வுகளையும் இனியவர்களையும் நினைவுகூரப் பயன்தரு மரம் நடுங்கள். 25 மில்க்வைற் நீல சோப் அல்லது சலவைத்தூள் வெற்றுப்பக்கற் தந்து மரக்கன்று பெறுங்கள். -மில்க்வைற். யாழ்ப்பாணம். (எ-5514)

## பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்விப் பயிலுநர்களை வெள்ளிக்கிழமைகளில் அவர்களது கல்வியைத் தொடர அனுமதிக்குமாறு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார். (159

## மாணவர் அனுமதி குறைவு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டை விட இவ்வாண்டு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் குறைவாகவே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு 8970 மாணவர்கள் இலங்கை முழுவதிற்மாக பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தனர்

ஆனால் இவ்வாண்டு 8900 மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (159)

## இராசி பலன்

21-10-1992

புதன்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 05)

ஆயிலியம் சாலை 6-47 வரை மகம் வவகறை 5-07 வரை தசமி பி. ப. 14-1 வரைஇராகு காலம் நண்பகல் 12-02 முதல் 1-32 வரை சுபநேரம் மாலை 4-32 முதல் 6-02 வரை சித்தாஅமிர்தயோகம்.

மேடம்; முயற்சி வீணாகுதல். கோபவார்த்தை. வெறுப்பு.

இடபம்: பந்துக்கள் விரோதம், தொழில் முடக்கம், பயம்.

மிதுனம்: நற்பெயர், புத்திலாபம், பிறருக்கு உதவுதல்.

கடகம்: வீண்பழி தகாத உறவு, மன உளைச்சல்.

சிங்கம்: சத்துரு ஜெயம், பணலாபம். காரியசித்தி.

கன்னி: இடையூறு, பெண் கலகம், அலைச்சல்.

துலாம்: நண்பர் சகாயம், மேலான நிலை, தியாகம்.

விருச்சிகம்: சௌபாக்கியம், புத்திதெளிவு, குடும்ப மகிழ்ச்சி.

தனுசு: இடநாசம் போன இடத்தில் பகை, மனச்சுமை.

மகரம்: பலவித செலவுகள், சிறுகாயம், தர்க்கம்.

கும்பம்: செய்தொழில் கீர்த்தி, தயாளசிந்தை, பயணம்.

மீனம்; உறவினர் வருகை. கலந்துரையாடல், முயற்சி வெற்றி.

— ஜோஸ்யர்


# 5-வது ஆண்டு நினைவஞ்சலி

1987-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22ஆம் திகதிகளில் இந்திய இராணுவ நடவடிக்கையால் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையின்போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்/ஊழியர்களுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளரும், உத்தியோகத்தர்/ஊழியர்களும் தங்கள் நினைவஞ்சலியைச் செலுத்துகின்றார்கள்.

1. வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
2. வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
3. வைத்திய கலாநிதி கே. கணேசரத்தினம்
4. திருமதி பா. வடிவேலு
5. செல்வி லீலாவதி முத்தையா
6. செல்வி மங்கையற்கரசி இராமநாதன்
7. திரு. கே. செல்வராஜா
8. திரு. கே. கிருஸ்ணராஜா
9. திரு. மு. துரைராஜா
10. திரு. வி. சண்முகலிங்கம்
11. திரு. வி. வரதராசன்
12. திரு. கே. வேதாரண்யம்
13. திரு. ஜோன் பீற்றர்
14. திரு. இ. சுகுமார்
15. திரு. க. சிவலோகநாதன்
16. திரு. எஸ். ஜெகநாதன்
17. திரு. கே. சிவ்ராசா
18. திரு. கோ. உருத்திரன்
19. திரு. க. மார்க்கண்டு
20. திரு. இ. இரத்தினராசா
21. திரு. க. நவரத்தினம்

(சி-2511)

# நீங்காத நினைவின் ஐந்தாம் ஆண்டு



## குருசுமுத்து யோண்பீற்றர்

(சில்றன்)

(யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)

மண்ணில் பிறப்பு 1964 - 03 - 15

விண்ணில் நுழைவு 1987 - 10 - 27

ஆண்டு ஐந்து சென்றதையா எங்கள் செல்வா
ஆனாலும் உமைநாமும் மறவோம் சிலரு
கடமையை காலனும் கூட்டிச் சென்றாய்
கண்ணிலே நீர் சுரக்கக் காத்திருந்தோம்
பாரதத்தின் பாதகரால் மாண்டாய் என்ற
பாழ் செய்திகேட்டு நாமும் பதைபதைத்தோம்
உடலிலே உயிர் உள்ள மட்டும் மைந்தா
உமைநாங்கள் ஒருபோதும் மறவோம் ஐயா
வல்லபரன் உங்களுக்கு நல்ல வாழ்வை
வழங்குவார் எனவேண்டி இறைஞ்சுகின்றோம்.

பெற்றோர், உறவினர்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(சி 6902)

## விமான விபத்து

(ஜகார்த்தா)

37 பயணிகளை ஏற்றிச் சென்ற இந்தோனேசிய விமானம் ஒன்று மேற்கு ஜாவாவில் ஒரு மலை உச்சியில் மோதியதில் விமானத்தில் சென்ற சகலரும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## சீனி விநியோகம்

[அரியாலை]

யாழ். விற்பனை இணைக்களத்தில் ஒருவருக்கு ஒரு கிலோ சீனி வீதம் கிலோ 27 ரூபாய் 75சதப்படிக்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது. [59]

# முக்கிய அறிவித்தல்

எமது சங்க தொழிற் பரப்பிலிருந்து 29 - 08 - 92-ம் திகதி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து நிவாரண விநியோக அட்டை இ, உ என்பன வைத்திருக்கும் சொந்தக்காரர் கவனத்திற்கு; "இ" நிவாரண அட்டைகள் பின்வரும் கிளைகளுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

கிளை 1 இணுவில்

கிளை 2 சீரணிச் சந்தி

கிளை 3 மருதனுமடம்

முதலாவது கட்ட நிவாரணம் குறிப்பிட்ட கிளைகளில் மட்டும் 23 - 10 - 92 முதல் வழங்கப்படும்.

மேற்படி அட்டைகளை வைத்திருப்போர் உங்களுக்கு அண்மையிலுள்ள கிளைகளில் 2-ம் கட்டத்திலிருந்து நிவாரணத்தைப் பெற விரும்பின் பின்வரும் விநியோக நிலையங்களில் பதிவு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே பதிவு செய்யவும்.

1. இணுவில் பரராசசேகரப் பிள்ளையாருக்கு அண்மையிலுள்ள நிலையம்
2. சீரணிச் சந்தியிலுள்ள விநியோக நிலையம்
3. மருதனுமடம் சந்தியிலுள்ள விநியோக நிலையம்.
4. கோண்டாவில் கிழக்கு இ. போ. ச. டிப்போ வீதியிலுள்ள விநியோகநிலையம்.
5. உடுவில் மானிப்பாய்வீதி சங்குவேலி, கந்தரோடையில் வசிப்போரும், உரும்பிராய், நீர்வேலி, கோப்பாய் பகுதியில் வசிப்போரும் மருதனுமடம் புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் பதிவு செய்யவும். இதற்கான விநியோக நிலையங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

தலைமைக் காரியாலய விலாசம்:

மருதனுமட புகையிரத நிலைய அருகாமை
மருதனுமடம் உரும்பிராய் வீதி.

பொது முகாமையாளர்,
அளவெட்டி - மல்லாகம்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(ஏ-2516)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 - 03 - 1972

மறைவு: 24 - 10 - 1989

திதி: 21 - 10 - 1992

## செல்வி இராசுகி விவேகானந்தா

(வேம்படி மகளிர் கல்லூரி O/L மாணவி)

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்

அன்பு அங்கிள் அருணாசலம்,
அன்ரி சிவலச்சுமிதேவி,
மாமன் சோமசுந்தரம் (இணுவில்)
உற்றார், உறவினர்.

சுகிபவனம்,
உரும்பராய் வடக்கு.

(சி 6904)

யாழ்ப்பாணம்

## தெரிவுக்குழு திட்டம் தமிழ்க் கட்சிகளின் பரிசீலனைக்கு

# 'வேலைத்திட்ட ஆவணம்' சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வொன்றை காணுமுகமாக தமிழ்க் கட்சிகளின் பரிசீலனைக்காக தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்களமுனசிங்க தமிழ்க் கட்சிகளின் பரிசீலனைக்காக 'வேலைத்திட்ட ஆவணம்' ஒன்றை முன்வைத்துள்ளார்.

இதன் விபரம் வருமாறு: இந்த வேலைத் திட்டத்தின்படி வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தனித்தனி மாகாண சபைகளாக இயங்கும்.

அதே நேரத்தில் இரண்டு சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பிராந்தியசபை ஒன்றும் நிறுவப்படும் எனத் தெரியவருகிறது.

மாகாணசபை ஒவ்வொன்றும் நிறைவேற்று மந்திரி ஒருவரின் கீழ் (எக்ஸிகியூட்டிவ் மினிஸ்டர்) மந்திரி சபையைக் கொண்டிருக்கும்.

இந்த இரு சபைகளின் மந்திரி சபையும் ஒன்றுசேர்ந்து பிராந்திய சபையின் மந்திரி சபையாக முதல் அமைச்சர் ஒருவரின் கீழ் செயற்படும்.

பிராந்திய சபையின் முதல் அமைச்சர் ஏதாவதொரு மாகாண சபையின் நிறைவேற்று மந்திரியாக முதல் வருடம் பதவி வகிப்பார்.

இதேவேளை மற்ற மாகாண சபையின் நிறைவேற்று மந்திரி உப முதல்வராகப் பதவி வகிப்பார்

இவரின் பதவிக்காலமும் தலா ஒரு வருடமாகவே இருக்கும் ஒரு வருடம் கழிந்ததும் உப முதல்வராக இருந்தவர் முதலமைச்சராவார் மற்றவர் உபமுதலமைச்சர் ஆவார் இவ்வாறு பதவிகள் இருவருக்கும் இடையில் மாற்றப்படும்.

மாகாணசபைகள் ஒவ்வொன்றும் தனித்து சுயமாகச் செயற்பட முடியும். ஆனால், இருமாகாணங்களுக்கும் பொதுவான விவகாரங்களில் இரு மாகாணங்களும் ஒன்றுசேர்ந்து பிராந்திய சபையாக முதலமைச்சரின் கீழ் செயற்படலாம்

மாகாண சபைகளுக்குத் தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பிராந்திய சபையின் உறுப்பினர்களாக இந்த இரு மாகாண சபைகளின் உறுப்பினர்களே இருந்து வருவார்கள்.

இரு சபைகளுக்கும் ஒரே ஆளுநரே இருந்துவருவார். (சி-வி)

## செய்திச்சிதறல்

### போரூட் உதவி

(தாளையடி)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்து தற்போது செம்பியன் பற்று வடக்கில் தற்காலிக வதிவிடக்குடிசைகளில் தங்கியுள்ள சிறுவர்களுக்கென போரூட் ஸ்தாபனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாலர் பாடசாலை அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (163)

### சீனி விநியோகம்

(மானிப்பாய்)

ப. நோ. கூ. சங்க கிளைகளில் தற்போது 27ரூபா 75சதவீதம் நான்குபேருக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு அரை கிலோ சீனியும் மூன்று பேருக்கு உட்பட்ட குடும்பத்திற்கு கால் கிலோ சீனி வீதமும் வழங்கப்படுகின்றது. (71)

### ஆலோசகர் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட சேவைக்கால ஆலோசகர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று 21ம் திகதி புதன் கிழமை காலை 9 மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 1992 ஆம் ஆண்டுக்கான வகுப்பேற்றப் பரீட்சை சம்பந்தமாக ஆராயப்படவிருப்பதால் அனைத்து சேவைக்கால ஆலோசகர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கோட்டப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் கேட்டுக்கொள்கிறார். (139)

### பரீட்சை ஒத்திவைப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் அகில இலங்கை ரீதியில் நவம்பர் மாதம் முதலாம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவிருந்த அகில இலங்கை சைவ சமய பாடப்பரீட்சைக பொ. த சாதாரணதர முன்னோடிப் பரீட்சையை முன்னிட்டு நவம்பர் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது. (139)

### மிளகாய் விலை அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

சங்கானை, வட்டுக்கோட்டை பகுதிகளில் தற்போது ஒரு கிலோ செத்தல் மிளகாய் நூற்று எழுபத்தைந்து ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (139)

### அகதி முகாம்களில் பாலர் பாடசாலை

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள புதிய அகதிமுகாம்கள்தோறும் பாலர் பாடசாலைகளை ஆரம்பித்துவைப்பதற்கான துரித நடவடிக்கைகளை சுட்டுடையில் இயங்கும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் மேற்கொண்டுவருகின்றனர். (139)

### புதிய கட்டிடக் கலைஞர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை கட்டிட கலைஞர் திட்டமிடல் பிரிவுக்கு புதிய கட்டிட கலைஞர் ஒருவர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்

இப்பதவி இதுவரை காலமும் வெற்றிடமாகவே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (159)

### பன்னவேலைப் பயிற்சி

(நெல்லியடி)

புலோலி வடமேற்கு மாலாவத்தை 'வைதேகி' பாலர் பாடசாலையில் வடமராட்சி மகளிர் அமைப்பினால் மகளிருக்கான பன்னவேலை கைத்தொழில் பயிற்சி நிலையம் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது

இப்பயிற்சியில் சுமார் 20 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர். (160)

### இலவச திருமணப்பதிவு

(நெல்லியடி)

உடுப்பிட்டிப் பகுதியில் இதுவரை காலமும் திருமணப்பதிவு செய்யாது வாழ்ந்துவரும் குடும்பத்தவர்களின் நன்மை கருதி உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலைய ஏற்பாட்டில் அடுத்த மாதம் 8ம் திகதி இலவச திருமணப் பதிவு நடைபெறவுள்ளது. (160)

### பாடசாலை இடமாற்றம்

(வட்டுக்கோட்டை)

மல்லாகம்குளமங்கால்றோமன் பாடசாலை கத்தோலிக்க லாகம் மகாவித்தியாலயத்தில் மாலை நேர வகுப்பாக இயங்குமென மல்லாகம் கொத்தணி அதிபர் திரு எஸ். கமலநாதன் தெரிவித்துள்ளார். (139)

### பரீட்சை முடிவுகள்

(திருநெல்வேலி)

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக 88-89ம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிவிட்டன.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களது பெயர்ப் பட்டியலை கொழும்பு ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் குறைவான மாணவர்களே இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்' (157)

### சிரமதானம் மூலம் வீதி திருத்தம்

(கொழும்புத்துறை)

சரசாலை-நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய உள்வீதி, வெளிவீதிகளை ஆலய பரிபாலன சபையுடன் இணைந்து சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் சிரமதானப் பணிமூலம் அண்மையில் துப்பரவு செய்துள்ளனர். (154)

## பற்றுக்குறை நீங்கும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் தளபாடப் பற்றுக்குறை விரைவில் நீங்கிவிடுமென கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

தற்போது தளபாட உற்பத்தி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் இவை பூர்த்தியானதும் உடனுக்குடன் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (159)

## கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்ட கூட்டுறவு தின விழாவையொட்டிய போட்டிகள் நவம்பர் 1ம் திகதி முதல் ஆரம்பமாகின்றன.

கூட்டுறவு அங்கத்தவர்களுக்கான கட்டுரை, பேச்சு, வினாடி வினா போட்டிகள் 1ம் திகதியும் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் 8ம் திகதியும் நாடகப் போட்டி ௯ம் திகதியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## இன்று

(திருநெல்வேலி)

இலவச கைப்பணி வேலை பயிற்சி வகுப்பு இன்று 21ம் தேதி புதன்காலை2-00மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பினை யாழ் மாநகராட்சிமன்ற சுகாதாரப் பிரிவினரும், பனை அபிவிருத்திச்சபையினரும் இணைந்து நடாத்தவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பு மூன்று மாதகாலம் இடம்பெறும். 30 யுவதிகள் பயிற்சி பெறுவார்கள். இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்பயிற்சித் திட்டத்திற்கான நிதிஉதவியை யுனிசெவ் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. (157)

0 0 0

### இலவச கல்வி நிலையம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி வசதியை முன்னிட்டு வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் இலவச கல்வி நிலையம் ஒன்றை யாழ். மகாத்மா காந்தி வீதியில் இன்று புதன்கிழமை பி. ப. 3மணிக்கு ஆரம்பிக்கவிருக்கின்றது.

சங்கத் தலைவர் திரு. என். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். வட்டவைபொறுப்பாளர் திரு. இளங்கோ கலந்துகொண்டு இவ் இலவச கல்வி நிலையத்தை ஆரம்பித்துவைப்பார்.

## மல்லாகம் கி. அ. சபைக்கு

# குண்டு வீச்சினால் 10 லட்சம் ரூ. சேதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் போது மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு விமானக்குண்டு வீச்சினால் பத்து லட்சத்து இருபதினாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நஷ்டத்தை உடன் வழங்கவேண்டும் என்று மேற்படி சங்கத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு அனுப்பிய மகஜருக்கு புனரமைப்பு புனர்வாழ்வு சமூகநலத்துறை அமைச்சு உடன் பதில் அனுப்பியுள்ளது.

தங்களுடைய மகஜர் சம்பந்தமாக நாம் தற்போது பரிசீலனை செய்து வருகின்றோம் விரைவில் பதிலொன்றை தங்களுக்கு அனுப்பிவைப்போம்'' என்று மேற்படி அமைச்சின் செயலாளர் திரு கிறிஸ்டி சில்வா, மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கு கடிதம் மூலம் பதிலளித்துள்ளார். (வி-க)

## ஸ்ரீலங்கா சுதந்திரகட்சிக்குள்

# புதிய அமைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ''ஜனஉறுமய'' என்ற பெயரிலான புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வமைப்பு விரைவில் தனது செயற்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்கட்சிகளின் பிரதம கொறடாவும் காலி மாவட்ட எம். பியுமான றிச்சர்ட் பத்திரான தலைமையில் இவ் அமைப்பு செயற்படவுள்ளதாகவும் அநுரா குழுவினரையோ அல்லது ஸ்ரீமாவோ அம்மையாரையோ ஆதரிக்காது நடுநிலைமையுடன் இவ் அமைப்பு செயற்படும் என்றும் அறிவித்துள்ளது

மேலும் வடக்கு- கிழக்குப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற கோரிக்கை உட்பட 8 அம்சக் கோரிக்கையை முன்வைத்து செயற்படவுள்ளதாகவும் இவ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்

இதேவேளையில் களுத்துறை மாவட்ட எம். பி திலக் கருணாரட்ண தலைமையில் ஹெல உறுமய என்ற அமைப்பு ஸ்ரீல. சு. கட்சிக்குள் ஏற்கனவே இயங்கிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## சகலகலாவல்லிமாலை

# விருத்தப் போட்டியில் பரிசில் பெற்றவர்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம் வடமராட்சிப் பகுதியிலுள்ள க. பொ. த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கிடையேயான சகலகலாவல்லி மாலை விருத்தப் பாவிற்கான போட்டியை நடாத்தி போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கியுள்ளது.

ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் செல்வன் க. பார்த்திபன், முதலாம் இடத்தையும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவன் ஜி. கந்தவேள் இரண்டாம் இடத்தையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் ரி. பிரதீபன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவி செல்வி ந. ஜெயபாரதி 1ம் இடத்தையும், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவி, செல்வி சி. தேவகி 2ம் இடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவி செல்வி ச. கலாதேவி 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை பரிசில்களை வழங்கினார். இப்போட்டிகளுக்குப் பிரதம தீர்ப்பாளராக சங்கீத பூஷணம் செல்வி யோகாம்பிகை செல்லையா பணியாற்றினார். (52-61)

## போட்டிப் பரீட்சை

(கொழும்புத்துறை)

கணக்குப்பதிவாளர் தரம் இரண்டு பதவி உயர்விற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் நவம்பர் ஆறாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இப்போட்டிப் பரீட்சை தொடர்பான முழுமையான விபரங்களைச் செப்டெம்பர் மாதம் 18ம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம் (154)

# பாக்கு நீரிணையில் இந்திய மீனவரின் நடமாட்டத்துக்குத் தடை

(சென்னை)

பாக்குநீரிணைக் கடற்பிராந்தியத்தில் இந்திய மீனவர்களின் நடமாட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இந்தியப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்பகுதியில் ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ள இந்திய கரையோரப் பாதுகாப்புப் படையும், கடற்படையுமே மேற்படி தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும் தமிழ்நாடு அரசின் சட்டவரையைத் தொடர்ந்தே மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டதாக இருக்கும் என்றுஅப்பத்திரிகை வும்சர்வதேச கடல் எல்லைக்கு வெளியே இத்தடை அமுலில் உளது. செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (க)

## கோட்டை ரயில் நிலையத்தில் முடிச்சுமாறிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் முடிச்சுமாறிகள் மற்றும் பிக்பொக்கற் ஆசாமிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதனையடுத்து பொலிசார் அங்கு தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் சுனில் என அழைக்கப்படும் ஆசாமியிடமிருந்து ஒரு லட்ச ரூபா வரையில் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் எனவே பயணிகள் மிக அவதானமாக கோட்டை புகையிரத நிலையத்தில் நடமாடும்படியும் பொலிசார் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்: கருத்துக் கணிப்பில் கிளிங்டன் முன்னணியில்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வாஷிங்டன் நகரில் நேற்று நடைபெற்ற கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவாகும் வாய்ப்பில் திரு. கிளிங்டனுக்கு 39 வீத வாக்குகளும், ஜனாதிபதி புஷ்ஷுக்கு 9 வீத வாக்குகளும் கிடைத்தன. (வி)

## இன்று நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

1987ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம், 22-ம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் இந்திய இராணுவத்தினர் உட்புகுந்து அங்கு கடமை புரிந்து கொண்டிருந்த வைத்தியர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் சிற்றூழியர்கள் உட்பட 22 பேரை சுட்டுக் கொன்ற ஐந்தாவது ஆண்டு நினைவுநாள் இன்று புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனைத்து ஊழியர்களால் அனுஷ்டிக்கப்படும். (56)

## 'மகளிர் பொற்கணக்கு' முதலாவது சீட்டிழுப்புக்கு 31ம் திகதி இறுதிநாள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி அறிமுகம் செய்துள்ள 'மகளிர் பொற்கணக்கு'க்கான முதலாவது சீட்டிழுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் 31ம் திகதி சனிக்கிழமைக்கு முன் தங்கள் கணக்குகளை திறக்க வேண்டுமெனவும் இதுவே இதற்கான இறுதி நாளெனவும் யாழ். இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராசா தெரிவித்துள்ளார்,

இதற்கு வசதியாக யாழ். மேற்தரக்கிளை இலங்கை வங்கி ஒரு விஷேட பிரிவினை ஆரம்பித்து 31ம் திகதி வரை காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை கருமமாற்றவுள்ளது. முதலாவது சீட்டிழுப்பு 8-3-93ல் நடைபெறும்.

ரூபா 500 முதலிட்டு மாதாந்தம் 250 ரூபா அல்லது அதன் பெருக்குத் தொகை ஒன்றினைத் தவணைப் பணமாகச் செலுத்தலாம். ரூபா 10,000 அல்லது அதன் பெருக்குத் தொகையினை ஒரே முறையில் முதலிடுவோர் மாதாந்த தவணைப்பணம் செலுத்த வேண்டியதில்லை. இத்திட்டத்தின் மூலம் பெருமளவு பணப்பரிசினை பெறலாம் எனவும் திருமதி துரைராஜா தெரிவித்துள்ளார். (சி)

## 'குமண'வில் வந்துள்ள பொருள்கள் விபரம்

(நெல்லியடி)

''குமண'' கப்பல் நேற்று மாலை 3 15 மணிக்கு பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது இதில் எடுத்துவரப்பட்ட பொருட்கள் வருமாறு:-

அரிசி- 1000 மெ. தொன், சீனி- 750 மெ தொன், தீப்பெட்டி- 02 மெ. தொன், மை. பருப்பு- 44மெ. தொன். பெ சீரகம்- 02 மெ. தொன், வெந்தயம்- 02 மெ. தொன், ந. சீரகம்- 02 மெ. தொன், மல்லி- 10 மெ தொன், அமோனியம் சல்பேற் ரீ டி. எம். 100 மெ. தொன், டீசல் 20 பரல், பருத்தித்துறை சேவாச்சிரமத்துக்கு- 10 மெ. தொன் பொருட்கள் போருட் நிறுவனத்துக்கு உரம்- 40 மெ. தொன் திருநெல்வேலி மில் இன்டஸ்ரீஸுக்கு- 75 மெ தொன் கால்நடை உணவு.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு தென்னை உரம் 120 மெ. தொன். தெளிகருவிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் 100.

யாழ். மாவட்ட விவசாய கூட்டுறவு சங்க சமாசத்துக்கு 320 நீர் இறைக்கும் இயந்திரம், யாழ் மாநகர சபைக்கு ம. எண்ணெய் 10 பரல, டீசல் 01 பரல், 423 தபால் பைகள்

யாழ். கல்வித் திணைக்களத்துக்கு புத்தகங்கள், திருநெல்வேலி சிறுவர் பாதுகாப்பு நிலையத்துக்கு 69 மெ. தொன் பொருட்கள், யாழ் பல்கலைக் கழகத்துக்கு 10 மெ. தொன் பொருட்கள்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருந்து வகை. யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு எரிபொருள் மருந்துவகைகள் இவற்றுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தனியார் வர்த்தகர்களுக்கு உணவுப் பொருட்களும் தனியார் மருந்துக் கடைகளுக்கு மருந்துவகைகளும் கொண்டு வரப்பட்டன. பொருட்களை இறக்கும் பணி உடன் ஆரம்பமானது. (160 61)

### ஜெர்மனியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தஞ்சம் கோரும் அகதிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு அவைதொடர்பாக தீர்ப்பொன்று வழங்கப்படும் வரை அகதிகளுக்கு வழங்கும் உதவிப்பணத்தை 25 சதவீதத்தால் குறைக்கப் போவதாகவும் ஜெர்மன் அரசு அறிவித்துள்ளது. (சி)

### கிழக்கு மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

இக்கிராமங்களில் உள்ள இரு இனத்தவர்களுக்கும் உடனடியாக ஆயுதப்பயிற்சி வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு 'ஷொட்கன்'களுக்கு பதலாக '303 ரக' ரைபிள்கள் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு துரிதமாக மேற்கொண்டு வருகிறது. [சி]

### இராணுவக் கட்டுப்பாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பகுதிகளை பார்வையிடுவதற்கு உதவி ஸ்தானிகருக்கும் அவரது குழுவினருக்கும் இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய உதவி ஸ்தானிகர் வவுனியா இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடாத்திவிட்டு உடனடியாகவே கொழும்பு திரும்பியதாகவும் கூறப்படுகின்றது. (வி)

### கிளாலி கடற்பரப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்தீனமாக உயிர் தப்பி இடைநடுவில் திரும்பி கிளாலிப்பகுதியில் நேற்று தரித்து நின்றனர்.

பீரங்கிப் படகுகள் நீண்ட நேரமாக கிளாலி கடற்பரப்பில் பீரங்கித் தாக்குதல்களை அடுத்தடுத்து மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது

இந்தப்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டம் கூடுதலாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56-159)

## பொலநறுவைச் சம்பவம்: முஸ்லிம் எம். பி.க்கள் பிரதமருடன் பேசுவர்

(கொழும்பு)

பொலனறுவையில் கடந்த வாரம் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் குறித்து அரசாங்கக் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் எம். பி. க்கள் பிரதமர் விஜயதுங்கவுடன் விரிவான முறையில் கலந்தாலோசிக்கவுள்ளனர்.

இம்முறை அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறுததால் நாளை நாடாளுமன்றத்தில் பேசவும் முஸ்லிம் எம். பி. க்கள் முடிவு செய்துள்ளனராம். (சி)

## இனப் பிரச்னைக்கு அமைதி தீர்வு காண தெரிவுக் குழு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்னைக்கு அமைதியான தீர்வைக்காணும் முகமாக நாடாளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. என ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். (க)

## புலிகள் நேபாளத்திலிருந்து இந்தியாவுக்கு அச்சுறுத்தலாம்

(காட்மண்டு)

விடுதலைப் புலிகள் நேபாளத்தில் பதுங்கியிருந்து இந்தியாவிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவில் இந்திய நேபாள பிரதம மந்திரிகள் நேற்று முன்தினம் நடாத்திய சந்திப்பின்போது இந்திய பிரதமர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

விடுதலைப்புலிகளுடன் பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதிகளும் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இது குறித்து இந்திய நேபாள அரசுகள் ஒருமித்த நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## குழந்தை விற்பனை நிலையம் பம்பலப்பிட்டியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இலங்கை குழந்தைகளை விற்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட இல்லமொன்றினைப் பம்பலப்பிட்டிப் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து கொண்டுவரப்படும் குழந்தைகள் பம்பலப்பிட்டியிலுள்ள இந்த இல்லத்தில் வைத்தே வெளிநாடு நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன.

தகவல் ஒன்றின் பேரில் இந் நிலையத்தைப் பொலிசார் கண்டு பிடித்ததுடன் சிலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். (சி)

### உணவு லொறிகளில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கு உடனடியாக பரிகாரம் தேடப்படாவிட்டால், யாழ். குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்லும் லொறிகளின் சேவை பெரிதும் பாதிப்படைந்து விடும், என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா இராணுவ முகாமுடன் உடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக ஹமில்டன் வனசிங்கா முறையீட்டாளர்களிடம் உறுதியளித்துள்ளார். (வி)

### மாணவர் சென்ற

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை நடந்த இப்பயங்கர சம்பவத்தில் 4 படகுகளில் சென்ற மாணவர்களில் 3 படகில் சென்ற மாணவர்கள் திரும்பி வந்து சேர்ந்து விட்டனர்

ஒரு படகில் சென்ற மாணவர்களது நிலை என்ன என்று அறிய முடியாதுள்ளது. அங்கிருந்து வந்த படகுகள் மீதும் நேசர் துப்பாக்கியால் சரமாரியான வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போதும் திரும்பி வந்துள்ளனர்.

ஒருபடகில் பயணம் செய்த மாணவர்கள் ஐவரது நிலை பற்றி அறிய பல்கலைக்கழக துணைவேந்தர் ஆவலாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சிரேஷ்ட விரிவுரையாளர் வந்த படகு மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் ஆனால் எவ்வித காயங்களுமின்றி தாம் வந்து சேர்ந்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார். (157)

## காங்கிரஸ் அமைப்பு அங்குரார்ப்பணம்

[கொழும்பு]

"இலங்கை மக்கள் காங்கிரஸ்' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 24ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக இவ் அமைப்பின் தலைவர் ஜே. எவ். சி. அமீர் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையைப் பேணுவதே இவ் அமைப்பின் நோக்கம் என்றும் இவர் தெரிவித்துள்ளார். (க)

## பாரதப் பிரதமருக்கு கறுப்புக்கொடி

[காட்மாண்டு)

இந்தியப் பிரதமர் நேற்று நேபாளம் சென்றிருந்தபோது அவரின் வருகையை எதிர்த்து கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

நேபாளத்தை இந்தியாவுக்கு விற்றுவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை அடுத்து பிரதமர் நரசிம்மராவுக்கு வலுவான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (கே)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81